**SC No.163/2018**

**எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர். எதிரிகள் 6 முதல் 10 ஆஜரில்லை. எதிரிகள் 6 முதல் 10 வரையிலான எதிரிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அ.சா.1 திருமதி. சுசீலா, க/பெ.ஜெகநாதன்**

**தேதி- 20.03.2024**

**இன்று மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். ( சாட்சி சாட்சியம் அளிக்கும் போது, எதிரிகளை பார்த்து ஆவேசமடைந்து திட்டுவதால் நீதிமன்ற நடைமுறை தடைபடாமல் இருப்பதற்காக எதிரிகள் நீதிமன்றத்திற்கு வெளியில் நிற்க அனுமதிக்கப்பட்டு சாட்சி பதிவை நீதிமன்றத்திற்கு வெளியிலிருந்து அனுமதிக்கப்படுகிறார்கள்.)**

**1 முதல் 6 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

குடியரசு தினத்தன்று ஞானவேல் என்பவர் கருப்பு நிற ஜட்டி அணிந்துக் கொண்டு தகாத வார்த்தைகளால் என்னை பார்த்து பேசியதாகவோ அந்த சண்டையில் ஞானவேல், அமுலரசி, நவநீதம் மற்றும் தீபா ஆகியோர் என் தலைமுடியை பிடித்து இழுத்தார்கள் என்று புகாரிலும், போலீசார் என்னை விசாரித்த போதும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். அந்த சண்டையில் ஞானவேல், இளையவேல், நாகப்பன், தனசேகரன், அமுலரசி,தீபா, நவநீதம் மற்றும் நீலா ஆகியோர் என்னை பிடித்து இழுத்து என் ஜாக்கெட்டை கிழித்து விட்டார்கள் எனவும் மற்றும் ஞானவேல் என் மார்பின் மீது உதைத்தார் எனவும், அவர்கள் அடித்ததால் நான் மயக்கமாகிவிட்டதாகவும் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன், மருத்துவமனையில் வைத்து எழுதினார்கள்.

அதே சம்பவத்தில் என்னை தாக்கும் போது என் மகன் அவர்களிடம் மாட்டிக் கொண்டார் எனவும், 8 பேர் தாக்கியதில் என் மகன் ரத்த வெள்ளத்தில் கீழே விழுந்துவிட்டார் எனவும், என் மகனுக்கு காஞ்சிபுரம் மருத்துவமனையில் தலையில் 8 தையல் போட்டார்கள் எனவும், என் மகனுக்கு குளுக்கோசு போட்டார்கள் எனவும் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொன்னேன், சாட்சி

போலீசார் பெயரை சொல்லி அவரிடம் சொன்னேன் என்று சாட்சியம் அளித்து, நாங்கள் 15 நாட்கள் காவல் நிலையததில் கையொப்பம் போட்டோம், எதிரிகள் வீட்டில் இருந்தார்கள் என்று சாட்சியம் அளிக்கறிா்.

நாகப்பன் என்பவா் ஊராட்சி மன்ற தலைவராக இருந்ததால் எங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தார் என்று புகாரிலோ போலீசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சொன்னேன், போலீசார் தான் எழுதவில்லை, நடவடிக்கை எடுக்கவில்லை, சாட்சி சம்பவத்தின் போது முடியை பிடித்து இழுத்ததில் கீழே விழுந்த என்னுடைய தலைமுடியை வைத்து அங்கிருக்கிறவர்கள் சாமானே வாங்கிவிட்டார்கள் என்று கையில் முடியின் அளவை காட்டி சாட்சியம் அளித்தார்.

மேற்சொன்ன சங்கதிகளை குறித்து புகாரிலும் போலீசார் விசாரணையிலும் நான் சொல்லவில்லை என்றாலும், சொல்லியதாக சொல்லி எதிரிகளை பழி வாங்க வேண்டியும் நீதிமன்றத்தின் அனுதாபத்தை பெற வேண்டியும் சொல்லப்பட்டவை என்றால் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சம்பவம் நடந்ததாக கூறப்படும் நாளில் எதிரிகள் ஞானவேல், இளையவேல், தனசேகா், நாகப்பன் ஆகியோா் கத்தி எடுத்துக் கொண்டு இவா்களை இனி விடக் கூடாது என்று சொல்லிக் கொண்டு இளையவேல் என்பவா் கடப்பாறையை எடுத்துக் கொண்டும், நீலா என்பவா் தொடப்பகட்டையைக் எடுத்துக் கொண்டும் தீபா என்பவரும் வந்தார் எனவும், ஞானவேல், தனசேகா், இளையவேல் ஆகியோா் வந்து கதவை இடித்தார்கள் எனவும், அப்போது நான் உள்ளே இருந்தேன் எனவும் எனது புகாரிலும் போலீசார் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சொல்லியுள்ளேன், புகார் கொடுக்க செல்லும் போது தான் வெட்டி விட்டார்களே என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறாா்.

தீபா, அமுலரசி, நீலா, நவநீதம் ஆகியோா் இதோ போரான் டா எனவும், இவன் திரும்பி வரக் கூடாது எனவும் சொன்னதை நான் கேட்டதாக புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன், என் புள்ளையை

வெட்டிவிட்டார்கள் நான் எப்படி சொல்லாமல் இருக்க முடியும். ஞானவேல் என்பவர் கழுத்தின் வலது புறம் வெட்டினார் என்று என்னுடைய புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன், என் மகனின் உயிரை காப்பாற்ற வேண்டி தான் சொன்னேன்.

அடிப்பட்ட இடத்தை நான் சென்று பார்த்த அன்று இரவே உடனே தூசி காவல் நிலையத்திற்கு சென்று தகவல் சொன்னேன் என்றால் சரிதான்,உடனே மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல சொன்னார்கள், அதனால் வந்துவிட்டேன். நீங்கள் அளித்த புகாரிலும் காவல் துறை விசாரணையிலும் தனசேகர் என்பவர் என் மகனின் கழுத்தை பிடித்து தூக்கினார் எனவும், அப்போது என் மகன் அம்மா என்னை காப்பாத்து அம்மா என்று சொன்னதாகவோ, நாகப்பன் மற்றும் இளையவேல் என் மகனை இரண்டு பக்கமும் கைகளை பிடித்துக் கொள்ள இவனை உயிரோடு விடக் கூடாது, அரைக்குறையாக விட்டுவிட்டால் நமக்கு தான் தீங்கு என்று நாகப்பன் கூறவில்லை என்றால் சொல்லாமல் எப்படி பி.சி.க்கு தெரியும்.

மேற்சொன்ன சங்கதிகளை என் புகாரிலும் போலீசார் விசாரணையிலும் சொல்லாததை தற்போது நீதிமன்றத்தில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் நான் ஏன் பொய் சொல்ல வேண்டும்.

(சாட்சியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd./ K. Vijaya,
Additional Sessions Judge,
Arani.